**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 7602/E/2018**

திரு ஆர்.வேலு ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தொற்றாத மாற்று நோய்களின் நிலையம் மற்றும்
அரசு இராயப்பேட்டை மருத்துவமனை,
சென்னை - 600 014. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 14.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 25.08.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 10.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு ஆர்.வேலு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி வி.சந்திரவதனி, நிர்வாக அலுவலர், தொற்றாத மாற்று நோய்களின் நிலையம் மற்றும் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 14.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தனது ஊதிய மறு நிர்ணயம் தொடர்பாக 10.08.2017, 12.03.2018 மற்றும் 22.05.2018 ஆகிய தேதியிட்ட மனுக்களை அளித்துள்ளதாகத்

தெரிவித்து, அம்மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் மேற்படி தொகையை வழங்காததற்கு உரிய காரணத்தையும் தகவலாகக் கோரி, The General Information Officer, The Director and Superintendent Office, Govt. Royapettah Hospital Chennai என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 28.08.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், கண்காணிப்பாளர் மற்றும் இயக்குநர், அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 14.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்று தெரிவித்து, தவறான தகவலை அளித்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேல்முறையீட்டாளர் 10.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 14.09.2018, 10.09.2018 மற்றும் 01.04.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தங்களது அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை ஆணையம் ஏற்றுக் கொள்கின்றது. இருப்பினும் விசாரணையின்போது மேல்முறையீட்டாளர், பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலில் திருப்தியில்லையென்று தெரிவித்ததனை ஆணையம் பதிவு செய்து, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை குறித்து இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து, உரிய தகவலை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக எழுத்துமூலமாக ஆணையத்திற்குச் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **மேல்முறையீட்டாளர் 14.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து, அது குறித்த தகவலை இவ்வாணை**

**கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 7602/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
தொற்றாத மாற்று நோய்களின் நிலையம் மற்றும்
அரசு இராயப்பேட்டை மருத்துவமனை,
சென்னை - 600 014.

**மனுதாரர்**

திரு ஆர்.வேலு,
பிளாட் எண்.32, வி.ஜி.பி. அமுதா நகர்,
மதுரவாயல்,
சென்னை - 95.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*